# செம்மொழித் தமிழ்

## மொழி வகைகள்

சொற்களின் அமைப்பை வைத்து மொழிகள் நான்கு வகைப்படும்.

1. தனிநிலை மொழி
2. ஒட்டுநிலை மொழி
3. உட்பிணைப்பு நிலை மொழி
4. சொற்றொடர் நிலை மொழி.

## தனிநிலை மொழி

எல்லாச் சொற்களும் இதில் தனித்து வழங்கக்கூடிய வேர்ச்சொற்களாக இருக்கும். தனித்தனியாக நின்று தொடர்களை அமைக்கும்.

எ.கா

சீனம், சியாம், பர்மியம், திபெத்தியம் போன்றவை தனிநிலை மொழிகளாகும்.

## ஒட்டுநிலை மொழி

வேர்ச் சொற்களுடன் ஒட்டுக்கள் சேர்ந்து வெவ்வேறு வகை இலக்கணப் பொருளை உணர்த்துகின்ற சொற்களை அமைக்கும். திராவிட மொழிகள் இவ்வகையைச் சார்ந்தவை.

பார் என்ற வேர்ச்சொல்லுடன் கிறு, ஆன் ஆகிய பின்னொட்டுக்கள் சேர்ந்து பார்க்கிறான் என்ற நிகழ்காலப் படர்க்கை ஆண்பால் வினைமுற்று அமைகிறது.

## திராவிட மொழிக்குடும்பம்

1. திருந்திய மொழிகள்

தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு

துளு, குடகு.

2. திருந்தா மொழிகள்

தோடா, கோத்தா, கோண்டி, குயி, குருக், மால்தோ

## திராவிட மொழிகளின் மூன்று கிளைக் குடும்பங்கள்

1. தென் திராவிடம்
2. வட திராவிடம்
3. நடுத்திராவிடம்.

## தென் திராவிடக் கிளைக்குடும்ப மொழிகள்

1. மலையாளம், 2. கன்னடம் 3. துளு
4. குடகு 5. தோடா

## நடுத்திராவிட கிளைக்குடும்ப மொழிகள்

தெலுங்கு, கோண்டி, கொலாமி, நாயக்கி, பெங்கோ, மண்டா, பர்ஜி, கதபா, குயி, குவி, கோலாமி.

## வடதிராவிட கிளைக்குடும்ப மொழிகள்

1. குருக்
2. மால்தோ
3. பிராகுயி

## இந்திய அரசியலமைப்பினால் ஏற்கப்பெற்ற திராவிட மொழிகள்

1. தமிழ் 2. மலையாளம் 3. கன்னடம் தெலுங்கு.

## ஆஸ்திரோ - ஆசிய மொழிக்குடும்பம்

இம்மொழிகளை முண்டா மொழிகள் என்றும் கூறுவர்.

கெர்வாரி, சந்தாலி, முண்டாரி, பூமிஜ், கோடா, ஹோ, அசுரி, அகரியா, சவரா, போண்டா, மஹாலி, கோர்கூ, காசி, நிகோபாரி, கோர்கு முதலிய மொழிகள் இதில் அடங்கும்.

## பேசும் இடங்கள்

ஒரிசா, மத்தியப்பிரதேசம், பீகார், மேற்கு வங்கம், அசாம், நிகோபார்.